**செப்டம்பர் - 15**

**"நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் பிரிந்துபோய் அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது நான் உங்களை ஏற்றுக்கொள்ளுவேன்." - 2 கொரி 6 : 17, 18**

யார் ஆவிக்குரிய விஷயங்களில் உலகத்திலிருந்து பிரிந்து மனசாட்ச்சியுடன் வாழ்ந்து, இருதயத்தின் விருத்த சேதனத்தையும், தேவனுடைய குடும்பத்தில் புத்திர சுவிகாரத்தையும் ஒப்புக் கொள்ளுகிறவர்களை மாத்திரம் தங்களுக்குச் சொந்தமானவர்களாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்களோ, அவர்களை சன்மார்க்கராலேயும், மதத்தில் அதிக சுதந்திரத்தையும் ஆதரிப்பவர்களினாலும், வேதாகமத்தின் தொகுத்தல், காலம், உண்மை இவைகளை நுட்பமாய் பிழை பார்போராலேயும் பாமர மக்களாலும் எதிர்க்கப்படுவதை தாங்களே கண்டுகொள்ளுவார்கள். இந்த ஜனங்கள் வெளிச்சத்தை எதிர்க்கின்றார்கள். ஏனெனில் வெளிச்சம் உபதேசத்துக்குரியதிலும் வேறு வழியிலும் அவர்களுடைய இருளை கண்டனம் செய்கிறது. ஆனாலும் இது தான் பின்தொடர்வதற்குரிய நல்லதும் பத்திரமானதுமான ஒரே மார்க்கமாயிருக்கிறது. உண்மையான இஸ்ரவேலர் மட்டுமே சகோதரராக அறிந்து கொள்ளப்பட்டு இவ்விதமாக, உண்மையான கோதுமைகளிலிருந்து பிரிக்கப்பட வேண்டுமென்பதே அதிக அளவு மேலானதாயிருக்கிறது.
**- Z ’99, 203 (R 2510)**

தம்முடைய ஜனங்கள், சாத்தானுடைய கட்டுப்பாட்டிற்குள்ளிருக்கிறதும் அவனுடைய ஆவியுடைய ஸ்தாபனங்களோடும், அனுஷ்டானங்களுடனும் உள்ள எல்லா பந்தத்திலிருந்தும், ஒத்துழைப்பிலிருந்தும், அனுதாபத்திலிருந்தும் பிரிந்திருக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. தெரிந்தோ தெரியாமலோ சாத்தானுடைய ஊழியக்காரராயிருக்கிற எல்லா ஜனங்களின் ஐக்கியத்திலிருந்தும், ஆவியிலிருந்தும் பிரிந்து போவதை இது குறிக்கும். கூடுமானவரை அவர்களோடுள்ள சகவாசத்திலிருந்து பிரிவதைக் குறிக்கும். இவ்விதமாக எந்த அசுத்தமான காரியத்தின் கறையையும் நாம் அதிகமாய் தவிர்ப்போம். அதனால் சில வேளைகளில் நாம் தனிமையாக நடக்க நேரிட்டால் தான் என்ன? நமக்கு முன் நமது கர்த்தரும் அதே அனுபவத்தையுடையவராய் இருந்தார் என்றும் தேவன் நம்மை ஏற்றுக்கொண்டு நம்முடன் தோழமை கொள்ளுகிறார் என்றும் சிந்தித்து கொஞ்சம் நம்மையே தேற்றிக் கொள்ளலாம். இப்படிப்பட்ட தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுதலும் அவரோடே தோழமை கொண்டுள்ளதும் எல்லா நஷ்டங்களையும் ஈடு செய்கிறது. **- P ’32, 136.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**எண் 16:21,26; எஸ்றா 10:11; சங் 50:5; நீதி 9:6; ஏசா 8:11; 52:11; எரே 51:6,9; அப் 2:40; 2கொரி 6:14-16; எபே 5:11; வெளி 18:4.**

**கோபுர வாசிப்பு : Z ’15, 230 (R 5737).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் சுத்திகரிப்பின் வேலை என்னில் நடந்தேறியதா? எப்படி? என்ன பலனுடன்?**